## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - 2013

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 10 (அ)(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பதவிநிலைக் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பதவிநிலைக் கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிக்கப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய நிலையிலான ரூபா 37,876,090 கிரயப் பெறுமதியான 25 வாகனங்கள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 தொடர்புபட்ட தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்தப்படாமை

இலங்கை தரைப்படையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 150,000 தொகையான பணம் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

#### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கை

பல்கலைக்கழகத்தால் கணக்கு வைக்கப்படுகையில் அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்த போதிலும் நிலையான வைப்பு வட்டி தேறியதன் பின்னர் வருமானத்தை இனங்காணும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தன. இதன் படி ஒரு விடயம் தொடர்பாக மாத்திரம் காசு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தமையால் நிலையான வைப்பிற்கான வட்டி வருமானமும் பெற வேண்டிய வைப்புத் தொகையான ரூபா 5,272,143 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுய நிதியீட்டு நிதியத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர் கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 123,091,693 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் ரூபா 35,585,399 தொகை ஊழியர் ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக வைத்துக்கொள்ளப்பட்டு தேறிய மீதியான ரூபா 87,506,294 மாத்திரம் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 12,400,000 ஊழியர் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படுவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அச் செலவினமோ அல்லது எஞ்சிய மீதியோ நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு பணத்தை ஒதுக்கிக்கொள்வதற்கோ

அல்லது செலவினத்தை ஏற்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்காக திறைசேரியால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அரசியலமைப்பின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்படும் சகல பணமும் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதாக தேசிய பாதீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் குறிப்பிடப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை தரைப் படையிலிருந்து அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 1,535,147 கிரயமான 02 வாகனங்கள் மீள தரைப்படைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இது மேலும் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 166,010,417 தொகையும் ரூபா 2,923,450 தொகையும் பின்தாக்கத்திற்கமைவாக நிதிக்கூற்றுச் சீராக்கங்களுக்குப் பதிலாக மூலதன மாற்றக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) வைத்தியசாலை நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 231,683,487 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 237(ஆ) | வழங்கலுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் உரிய பொருட்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றதாகவும் உரிய பொருட் பதிவேட்டிலும் இருப்புப் புத்தகங்கள் போன்றவற்றிலும் அப் பொருள் உள்ளடக்கப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,479,000 பெறுமதியான பொருட்களை வழங்குவதற்கு முன்னர் மொத்த பெறுமதியும் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(5) | ஒவ்வொரு உபகட்டுநிதியும் உரிய கணக்காண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அத் திகதியின் உள்ளவாறான ரூபா 39,913,676 தொகையான கொள்வனவு முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,650,473,351 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல் 2006 | |
| (i) | 4.3 ஆம் அத்தியாயம் | கொள்வனவு ஒப்பந்தத்திற்காக கேள்வி கோரப்பட முன்னர் கிரய மதிப்பீடொன்று தயாரிக்ககப்பட வேண்டிய போதிலும் மூன்று மாடிக் கட்டிமொன்றை நிர்மாணிப்பதற்காக உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,886,314 பெறுமதியான ஒப்பந்தம் தொடர்பாக மேற்கூறப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.4.4 ஆம் பந்தி | ஒப்பந்த வேலைகளுக்காக வழங்குனர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணையொன்றைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தப்பெறுமதியில் 20 சதவீதமான வேலைப் பூர்த்தி முற்பணமொன்றை வழங்க முடிந்த போதிலும் அத் தொகைக்கு மேலாக பாதுகாப்புப் பிணையொன்று இல்லாது ரூபா 1,959,970 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) | 8.9.1 ஆம் பந்தி | பொருட்கள் அல்லது சேவைகளின் கொள்வனவின் போது ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொள்வனவின் போது வழங்குனருடன் முறையான எழுத்துமூல உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 9,122,757 தொகையான 4 பொருட்களின் கொள்வனவுகள் தொடர்பாக முறையான எழுத்துமூல உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 23,275,352 தொகையான பற்றாக்குறையானதுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 36,566,608 மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 59,841,960 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. இது சதவீதமாக 164 சதவீதமானதுடன் வீழ்ச்சிக்கு செயற்பாட்டுச் செலவினம் கூடியமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 வெளிநபர்களால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்டஈடு பெற்றுக்கொள்ளப்படுவது, பல்கலைக்கழகத்திற்கு உரித்தான குளக்கட்டின் உரித்து, காணி ஒன்றின் உரித்தைக் கோரிநிற்றல் மற்றும் வேலையிலிருந்து விலக்கப்பட்டமை போன்ற விடயங்கள் இதற்குக் காரணமாகியிருந்தன.

(ஆ) ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாகவும் லீவு பெற்றுக்கொள்ளப்படாது விரிவுரைகளில் கலந்துகொள்ளத்தவறியமை போன்ற பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழகத்திலிருந்து விலக்கப்பட்ட கடெட் உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு எதிராக ரூபா 3,650,000 தொகையான நட்டஈடு கோரி நிறுவகத்தால் 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

மருத்துவ பீடக் கட்டிடத்தில் நிர்மாண வேலைகளுக்காக கருங்கல் வழங்கப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனருக்கு ஓர் கட்டளை வழங்கப்பட்டு உரிய மாதிரிகளின் படி பொருட்கள் விநியோகிக்கப்பட்டதை அடுத்து பணம் செலுத்தப்படும் அடிப்படையில் வழங்கப்படுவதற்குப் பதிலாக கட்டளையில் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையும் முற்பணமாகச் செலுத்தப்பட்டு அவ்வப்போது பொருட்களைப் பெறும் முறைமையொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி 2012 மே 31 ஆம் திகதி ¾ அங்குல 50 கருங்கல் கியூப்களுக்காக ரூபா 245,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 யூன் 28 ஆம் திகதி வரையிலும் ரூபா 142,100 பெறுமதியான கருங்கல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் இணைக்கப்பட்ட வெரஹெர பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஆதார வைத்தியசாலைக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,705,006,332 தொகை செலவினம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகையில் திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிராததுடன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விக் குழு ஒன்றின் பரிந்துரையின் படி வெளிநாட்டுக் கம்பனி ஒன்றால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் அக் கம்பனிகளுடன் கலந்துரையாடப்பட்டதை அடுத்து 201,629,000 அமெரிக்க டொலர் (ரூபா 26 பில்லியன்) பெறுமதிக்கு வழங்கப்படுவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இவ் ஒப்பந்தத்திற்காக திறைசேரிப் பிணையில் தேசிய சேமிப்பு வங்கியால் மேற்குறித்த பெறுமதிக்கு சமமான கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிர்மாணிப்புச் செயற்பாட்டில் ஆலோசனைச் சேவைகளுக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 225,000 தொகை செலுத்தப்படும் அடிப்படையில் உள்நாட்டு நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக திறந்த கேள்வி முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே குறித்த வேலை ஒப்படைப்பொன்று இல்லாது இத்தகைய பாரிய நிர்மாணிப்புச் செயற்பாடுகளுக்காக மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் ஆலோசனைச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது கணக்காய்வின் போது திருப்திகொள்ளமுடியாதிருந்தது.

(இ) வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு வரும் 47 ஏக்கர் 37.9 ரூட் காணியின் உரித்தைக் கையேற்கும் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**4.3 பதவியணி நிர்வாகம்**

தாபன விதிக்கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் வேலை நீக்கத்துக்குட்பட்ட அல்லது பதவியிலிருந்து தானே விலகிய ஒருவர் மீள அரசாங்க சேவையில் சேர்க்கப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அளவையாளரின் சீஜீ/1/2/2/143 ஆம் இலக்க 2012 யூன் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வேலையை விட்டு விலகிச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டு ஓர் உத்தியோகத்தர் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியில் சேர்க்கப்பட்டிருந்தார். இவ்வாறே 2011 நவம்பர் 01 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட விரிவுரையாளர் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக சேர்க்கப்பட்டிருந்தார்.

**5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டில் குறிப்பிடப்பட்ட செலவின விடயங்களின் செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 25 சதவீதம் முதல் 400 சதவீதம் வரையான முரண்களால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. மேலும் திருத்தப்பட்ட பாதீடு முகாமைத்துவ சபையால் 2014 சனவரி 09 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புகள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பான வினைத்திறமையீனங்கள் முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சீராக்கல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(அ) ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவு தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

(ஆ) பல்வேறு முற்பணங்கள் கொடுப்பனவு தொடர்பாக ஆகக் கூடுதலான நிதி வரையறை மீறப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த பாதீட்டு ஏற்பாட்டிற்கு மேலதிகமாக செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(ஆ) கொள்வனவுகள்
(இ) மனிதவள முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு